புதிய பொலிவுடன், மேலதிகப் பக்கங்களுடன் வெளிவரும் மலைமுரசை 16.09.2012ல் இருந்து எதிர்பாருங்கள்

உள்ளே கிழக்கு மாகாண தேர்தல் முடிவுகள்

விலை – 20.00

ஆவணி மாதம் 24ம் திகதி September 09, 2012

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 07

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# கொடகே சாகித்திய விருதை வென்றார் சேவியர்



திருக்கோணமலையின் புகழ்பூத்த சிறுகதையாளர் தேவசகாயம் சேவியர் (நந்தினி சேவியர்) சிறுகதைக்கான கொடகே சாகித்திய விருதினைக் கைப்பற்றினார்.

மும்மொழிகளிலும் இலக்கியத்திற்குப் பணியாற்றி வருகின்ற படைப்பாளிகளையும் படைப்புக்களையும் கௌரவிக்கும் முகமாக கடந்த பல வருடங்களாக கொடகே நிறுவனம் சாகித்திய விருதுகளை வழங்கி வருகின்றது. 2011ல் வெளியான தமிழ்மொழி மூல கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள் ஆகியவற்றுக்கான 14வது வருட விருது வழங்கும் விழா 06.09.2012ல் கொழும்பு ஜோன் டி சில்வா அரங்கில் மாலை 3மணியளவில் நடந்தேறியது. இறுதிவரை முடிவுகள் அறிவிக்கப்படாமலேயே போட்டிக்குப் பரிந்துரைக்கப்பட்ட சிறுகதைத் தொகுப்புக்களான தாட்சாயிணியின் - அங்கயற்கன்னியும் அவள் அழகிய உலகமும், நீ.பி. அருளானத்தத்தின் - ஓ அவனால் முடியும், கிண்ணியா ஏ.எம்.எம். அலியின் - ஒரு தென்னைமரம், ஆரையம்பதி க. சபாரத்தினத்தின் - ஏற்றமிறக்கம் ஆகியவை சேவியரின் - நெல்லமரப் பள்ளிக்கூடம் சிறுகதைத் தொகுப்புடன் போட்டியிலிருந்தன. எனினும் இறுதியில் நந்தினி சேவியரே வெற்றியாளராய் அறிவிக்கப்பட்டுப் பரிசளிக்கப்பட்டார்.

அகிலஇலங்கை முழுவதற்குமான இப்போட்டியில் (பக்கம் 8)



நந்தினி சேவியர் நெல்லிமரப் பள்ளிக்கூடம்

# வெற்றியடைந்தது புனித மரியாள் கல்லூரியின் விவாத அணி

## காலிறுதிப் போட்டிக்குத் தகுதி



அகில இலங்கை மட்டத்தில் நடாத்தப்பட்டு வரும் "விவாதவாளர்" (The Debater) விவாதப் போட்டியில் மற்றோர் மைல்க்கல்லைத் தாண்டியுள்ளது திருக்கோணமலை புனித மரியாள் கல்லூரியின் (St. Mary's College - Trincomalee)விவாத அணி.

பலசுற்று விவாதப் போட்டிகளிற் பங்குபற்றியுள்ள இவ்வணி நாடு முழுவதிலுமுள்ள அறுபத்தி னான்கு பாடசாலைகளிற் கிடையே தற்போதுவரை நடாத்தப்பட்ட அனைத்துப் போட்டிகளையும் வெற்றிகொண்டு தேர்வு செய்யப் பட்டுள்ள கடைசி எட்டுப் பாடசாலைகளுக்குள் ஒன்றாகத் தன்னைப் பதிந்துள்ளது. கடைசிப் போட்டியில் கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்கொண்டு கடும் போராட்டத்துடன் வெற்றி யோன்றைப் பதிவுசெய்துள்ளது இவ்வணி.

"விவாத அணி மேடையேறிய போது நான் மிகவும் பதற்றமாய் இருந்தேன். எனினும் ஆரம்பம் முதலே எனது (பக்கம் 8)



அதிபர் அருட்சகோதரி நிரோசா அவர்களுடன் மாணவிகள்
இடமிருந்து வலமாக அமர்ந்திருப்போர்
வி.கஜேந்தினி, எம்.நிதர்சினி, ஆர்.பாணுஜா, ரி.ஜென்சிகா
நிற்பவர்கள்
ஜி.சர்மினி, பி.விதுர்ஜா, எஸ்.தட்சாயினி, கே.மாதுமை

## இந்துக் கல்லூரி மாணவன் விழுந்து படுகாயம்

திருக்கோணமலை இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் ஒருவர் 04.09.2012 செவ்வாய்க் கிழமையன்று பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

தரம் 04ல் கல்வி கற்கும் கிருஷாந் என்பவரே தலையில் பலத்த காயத்துடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சக மாணவர்களுடன் வகுப்பறையில் (பக்கம் 8)

## "என்னைக் கவர்ந்த குவாடலூப்பே அன்னை"

அன்னை மரியாளின் சிறப்புக்களை எடுத்துரைக்கும் வண்ணம் அருட்தந்தை ஜோர்ஜ் திசாநாயக்கா அவர்களால் எழுதப்பட்ட "என்னை கவர்ந்த குவாடலூப்பே அன்னை" எனும் நூலானது கடந்த 31.08.2012 அன்று மாலை 5.00 மணிக்கு திருக்கோணமலை தூய மரியாள் பேராலயத்தில் வெளியிடப்பட்டது. அருட்பணி கிறைற்றன் அவுட்ஸ்கோன் அவர்கள் இந்நிகழ்வை தலைமை தாங்கியதுடன் இந்நிகழ்வில் பிரதம (பக்கம் 8)

## டோக்கியோ சீமெந்துக் கம்பனியில் தீவிபத்து ?

கடந்த வாரம் டோக்கியோ சீமெந்துக் கம்பனியில் ஏற்பட்ட தீவிபத்தால் இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ளவைகள் சாம்பலாகியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. தீ பற்றிக் கொண்டவுடன் கடற்படையின் தீயணைப்பு வாகனங்கள் தளத்திற்கு விரைந்து (பக்கம் 8)

## தீ வைத்துத் தற்கொலை

31.08.2012 வெள்ளிக்கிழமை அன்று குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக சுகந்தினி என்பவர் தனக்குத்தானே தீ வைத்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். (பக்கம் 8)

## திருமலையில் சனாதிபதி

சனாதிபதி கடந்த சில தினங்களில் திருமலைக்கு வருகை தந்திருந்தார். அவர் புதிதாகக் கட்டப்பட்ட நோயாளர் விடுதியொன்றைத் திருமலைத் தளவைத்தியசாலையில் திறந்து வைத்ததுடன் தளவைத்திய சாலையின் பிரமுகர்களுடனான கூட்டங்களையும் நிகழ்த்தியிருந்தார். திருக்கோணமலையில் தேர்தலுக்கு முன்னுள்ள அரசியற் கள நிலமைகளை ஆராய்ந்த சனாதிபதி (பக்கம் 8)

## கட்டுப்பாடின்றி உயரும் தேசிக்காயின் விலை

திருமலைச் சந்தையில் தேசிக்காயின் விலை கட்டுப்பாடின்றி உயர்வதைக் காணமுடிந்துள்ளது. கடந்த மாதத்தில் கிலோ ரூபா 300 ஆக விற்கப்பட்ட தேசிக்காய் 100 வீத விலை அதிகரிப்பை இம் மாதத்தின் இரண்டாம் வாரகாலத்தில் பதிவு செய்துள்ளது. தற்போது திருமலைப் பொதுச் சந்தையில் கிலோ தேசிக்காய் (பக்கம் 8)

## சீமெந்தின் விலை ஏறி இறங்கியது

கடந்த வாரத்தில் திடீரென சீமெந்தின் விலை 935 ரூபாவிற்கு விற்கப்பட வேண்டும் என டோக்கியோ சீமெந்துக் கம்பனியால் வியாபாரிகள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். ஏற்கனவே பையொன்று 855 ரூபாவிற்கு விற்கப்பட்ட சீமெந்தின் விலையே இவ்வாறு கூட்டப்பட்டிருந்தது. திடீரென (பக்கம் 8)

## எழுவானிற் கலைவிழா - 2012

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வருடாந்தம் நடாத்தப்படும் மேடை நாடக நடனப் போட்டிகளின் பிரதேச மட்டப் போட்டிகள் 15.09.2012ல் திருக்கோணமலையில் நடாத்தப்படவுள்ளன.

கிழக்கு மாகாணத்திலுள்ள கலாசார நிலையங்கள், கலை, (பக்கம் 8)

## குச்சவெளியில் இரண்டாவது நட்சத்திர உல்லாச விடுதி.

இலங்கையின் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 2016 இல் 25 இலட்சமாக அதிகரிக்கச் செய்யும் அரசின் திட்டத்தின் கீழ் திருக்கோணமலையின் குச்சவெளிப் பிரதேசத்தில் இரண்டாவது சுற்றுலா மையத்தை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்ற செய்திகள் வெளியாகியுள்ளன. மிகப் பெரும் பிரதேசத்தில் நட்சத்திர அங்கீகாரம்கொண்ட உல்லாச விடுதிகளை அமைப்பதே (பக்கம் 8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு

159A, 2ம் மாடி, கடல் முக வீதி,
திருகோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

ஒரு ஆசுவாசப் பெருமூச்சுடன் வானொலியின் அலைவரிசைகளை அலைக்கழித்துக் கொண்டோ, அலைவாங்கி இலக்கங்களை அழுத்தி தொலைக்காட்சி அலைவரிசைகளை மாற்றிக் கொண்டோ உட்கார்ந்திருப்பீர்கள். அந்த ஆசுவாசமும் இந்த அலைவுகளும் நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலையொட்டியும் அதில் நீங்களிட்ட புள்ளடியினாலும், அதன் முடிவுகளை அறிந்து கொள்ளும் ஆர்வத்தினாலுமே ஆகும்.

எல்லாம் முடிந்துவிட்டது. நீங்களும் நிச்சயமாக வாக்களித்திருப்பீர்கள். முடிவுகளின் பெரும் பகுதி தெரியவும் வந்திருக்கும். ஒரு சனநாயக நாட்டின் நல்ல குடிமகனாக நாங்களும் நீங்களும் எதிர்பார்க்கும் அரசியற் தலைவர்களும், அவர் சார் கட்சிகளும் ஆட்சிப் பீடத்திற்குத் தெரிவாகியிருக்கும். ஆனால் இத்துடன் எமது கடமைகள் நிறைவுற்று விட்டதா?

நாங்கள் வாக்களித்தவர்கள், நாங்களே வாக்களித்தவர்கள், நாங்கள் தான் எம் தலைவர்களைத் தேர்ந்துள்ளோம், ஆனால் நாங்கள் அவர்களை எமக்கானவர்களாக இன்றுவரை மாற்றியிருக்கின்றோமா? இருபது, முப்பது, ஐம்பது வருடங்கள் என்றெல்லாம் எம் வரலாற்றைப் பேசியது போகட்டும். என் கேள்வியெல்லாம் பத்ம பிரஷன் மலைமுரசில் எழுதியது போல வாக்களிக்க முன் அவர்களும் வாக்களித்த பின் நாங்களும் பிச்சைக்காரர்களாக மாறப் போகின்றோமா என்பதே?

அதற்கு மலைமுரசும் அதன் மிகப் பெரும் சக்தியாளர்களான நீங்களும் விடப்போவதில்லை இனி. வரலாற்றை யார் எழுதினாலும் எமக்குப் பயமில்லை இனி. நாமே தேர்வுசெய்த தலைவர்களின் வரலாற்றை எம்முடன் இணைத்து இனி நாம் தான் எழுதப் போகின்றோம். அதற்கான முதலாவது செயற்பாடாக மலைமுரசு வாசகர்களை அரசியற் தலைவர்களுடன் வாராந்தம் கேள்வி பதிலூடாக இணைக்கப் போகின்றது. உங்களுக்கு நிகழும் அநீதிகளை நீங்களே உரியவர்களிடம் கேட்டுத் தீர்த்துக்கொள்ளும் அரங்கொன்றை மலைமுரசு திறக்கவிருக்கின்றது. நீங்கள் கேட்பதற்கு, உரிய அரசியல் தலைவர் அல்லது அதிகாரி இனி பதில் சொல்லித் தீர வேண்டும்.

வாக்கு மட்டுமல்ல எம் ஆயுதம்... எம் வாய்மையும் தான்! தயாராகுங்கள்...

-ஆசிரியர்-

வியாபாரம் பெருக்க விளம்பரம் செய்யுங்கள். வர்ண விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்

தொடர்புகளுக்கு:
159A, 2ம் மாடி, கடல் முக வீதி, திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com, 0754252042
58, வித்தியாலய வீதி, திருக்கோணமலை.

## குளக்கோட்டனைப் பிடித்துள்ள துரு

திருக்கோணமலை நகரப்பகுதியில் காணப்படும் சிறுவர் பூங்காவான குளக்கோட்டன் சிறுவர் பூங்கா முன்பிருந்ததை விட இயற்கையழகுடன் மிளிரும் அதேவேளை, சில குறைபாடுகளும் இங்கு காணப்படவே செய்கின்றது. சிறுவர்கள் விரும்பிப் பொழுதைக் கழிக்கவரும் இப் பூங்காவில் விளையாட்டு உபகரணங்கள் போதாமல் இருப்பதும், இருக்கும் உபகரணங்கள் துருப்பிடித்த நிலையில் பழுதடைந்து காணப்படுவதும் பெற்றோர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. இவற்றினைக் கருத்திற் கொண்டு தகுந்த நடவடிக்கைகள் எடுக்குமாறு உரிய அதிகாரிகளிடம் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## திருமலை சர்வோதயத்தில் தேசோதயம் கருத்தரங்கு

சர்வோதய நிறுவனத்தாரின் ஏற்பாட்டில் திருக்கோணமலை புளியங்குளப்பகுதியிலமைந்துள்ள மாதுமை அம்பாள் வித்தியாலயத்தில் கடந்த 2012.08.31 தொடக்கம் 2012.09.02 வரையான மூன்று தினங்கள் ஆன்மீக விடயங்கள், தேசோதய செயற்திட்டத்தின் நோக்கம் முதலான விடயங்கள் பற்றிய கருத்தரங்குச் செயற்திட்டம் ஒன்று நடைபெற்றது. இதில் சர்வோதய சிரமதான சங்கத்தின் கௌரவதலைவர் கலாநிதி ஏ.ரி. ஆரியரத்ன அவர்கள் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

## நிலவின் முதல் மனிதன் மரணம்

யூலை 20.1969ல் நிலவின் முதற்கால்தடம் பதித்து உலகின் விண்வெளி ஆய்வுகளின் ஓர் மைல் கல்லைப் பதித்த நீல்ஆம்ஸ்ரோங் கடந்த வாரம் தனது 82 வயதில் இயற்கை எய்தினார்.

நிலவில் தான் கால் பதித்ததை நினைவு கூறும் அவரது வார்த்தைகள் உலகப் பிரசித்தி பெற்றவை. அவை கூறுவதுயாதெனில் "அது ஒரு சிறிய கால்தடம் தான் ஆனால் அதுவே மனித குலத்தின் மாபெரும் பாயச்சல்" (That's one small step (a) man, One giant leape for mankind) என்பதாகும்.

## புனித சவேரியார் பாடசாலையின் விடுமுறை நீடிப்பு

திருக்கோணமலை புனித சவேரியார் மகா வித்தியாலயத்தின் விடுமுறை நாட்கள் நீடிக்கப்பட்டுள்ளது. கடந்த 03.09.2012 திங்கட்கிழமை அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை முடிந்து 3ம் தவணை கல்வி செயற்பாடுகளுக்காக ஆரம்பிக்கப்பட்டது. புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்களைத் திருத்தும் பணி புனித சவேரியார் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் எதிர்வரும் 10.09.2012 அன்றே இப் பாடசாலை கல்விச் செயற்பாடுகளுக்காகத் திறக்கப்படவுள்ளது.

## விசமிகள் யார்?

ஆசிரியைகளின் தங்குமிட விடுதிக்குள் புகுந்த விசமிகள் அவர்களின் பொருட்களைச் சேதப்படுத்தியும், அவர்களை உடைகளை வெட்டி நாசப்படுத்தியும் சென்றுள்ள சம்பவம் தொடர்பான விசாரணைகள் காவல்துறையால் தொடர்ந்தும் நடைபெறுவதாக தெரிய வந்துள்ளது.

ஈச்சிலம்பற்று சண்பகா மகாவித்தியாலய ஆசிரியைகளுக்கே இவ்வாறானதொரு அதிர்ச்சிதரும் விடயம் கடந்த மாதமொன்றில் நிகழ்ந்துள்ளது. இவ்வாறு உட்புகுந்த விசமிகள் எப்போதும் போலவே தகாத வார்த்தைகளை அவர்களின் விடுதிச் சுவர்களில் வரைந்து விட்டுச் சென்றிருந்ததாக அவ் ஆசிரியைகள் தெரிவித்திருந்தனர். இவ் வாசகங்களைக் கண்ணுற்ற அதிபர் உடனடியாகவே அவ்வாசகங்களை அழித்து விட்டதாகவும் இப்பிரச்சனையைத் தீர்க்க அதிபராலும், வலயக் கல்விப் பணிமனையினாலும் இயலாமற் போய்விடவே சுமார் ஒரு வாரகாலத்தின் பின்னர் இப்பிரச்சனை தொடர்பான மனுவொன்று காவல்துறையினரிடம் கையளிக்கப் பட்டதாகவும் அத்தகவல்களிலிருந்து மேலும் தெரியவந்துள்ளது.

## தாமதமாகியது தேர்தல் பணிச் செயற்பாடுகள்

தேர்தல் பணிகளில் ஈடுபடும் அரச அலுவலர்களை 07.09.2012ல் காலை 6.30 மணிக்குச் சமூகமளித்துக் கடமைகளைப் பொறுப்பேற்குமாறு திருகோணமலைத் தேர்தல் பணியகம் அறிவுறுத்தியிருந்த போதும் காலை 8.00 மணிவரை தேர்தல் பணியக அதிகாரிகள் வராமையால் பெருமளவு அரச உத்தியோகத்தர்கள் தமக்கெனப் பணிக்கப்பட்ட இடங்களில் காத்துக்கிடந்ததைக் காணக்கூடியதாய் இருந்தது. தங்களைக் காலை 6.30 மணிக்கு அறிக்கையிடுமாறு உறுதியாகப் பணித்திருந்ததாகக் குறிப்பிட்ட அவர்கள் தாம் வீணே காலை 8 மணிவரை காத்துக் கிடந்ததை மனக்கிலேசத்துடன் தெரிவித்தனர்

## வடிகான்களைத் தடைசெய்யும் குப்பைகள்!



திருக்கோணமலை மடத்தடியைப் பிரதான வீதியுடன் இணைத்துள்ள காண்களில் தொடர்ந்தும் குப்பை கூழங்கள் நிறைந்துள்ளதைக் காண முடிகின்றது.

இப்பிரதேசத்தின் கழிவுகளை அகற்றப் பிரதி புதன்கிழமை தோறும் கழிவகற்றும் வண்டிகள் வந்த வண்ணம் உள்ளன. இதற்கு முதல்நாள் செவ்வாய் கிழமை கானைச் சுத்தப்படுத்தும் ஊழியர்கள் கானினுள் படியும் குப்பைகளை அள்ளி அருகே போட, புதன்கிழமைகளில் வரும் கழிவகற்றும் வண்டிகள் அதனை ஏற்றிச் செல்கின்றன. இந்த நடைமுறையால் கழிவு நீர் வடிந்து செல்ல ஒழுங்கைகளில் அமைக்கப் பட்ட கான்களில் குப்பைகள் மீள நிறைந்த வண்ணமே உள்ளது.

இதனால் இப்பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கு கின்றனர். அத்தோடு உரிய அதிகாரிகளை இவ் விடயம் தொடர்பாக கவனம் எடுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர். தற்போதுள்ள காலம் நுளம்புகள் பெருகும் காலமாகவுள்ளதால் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறும் அவர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

## அவுஸ்திரேலியப் பயணிகள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்

கடந்த மாதம் 20ம் திகதி புல்மோட்டைக் கடற்பரப்பில் கைதாகியிருந்த சுமார் 79 சட்டவிரோதப் பயணிகள் 03.09.2012ல் சரீரப் பிணையில் திருமலை மாவட்ட நீதவான் நீதிமன்றால் விடுவிக்கப் பட்டுள்ளனர். கைதாகிய முதலிரு நாட்களிலும் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் பின்னர் காவல்துறையால் கையேற்கப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட போது விளக்கமறியல் தடைக்குட்படுத்தப் பட்டிருந்தனர். பின்னர் 03.09ல் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டுள்ள இவர்களின் அடுத்த வழக்குத் தவணை 26.11.2012ம் திகதிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடற்படையாலும், புலனாய்வுப் பிரிவினராலும், கொழும்பின் விசேட புலனாய்வுப் பிரிவினராலும் விசாரணைக்குட்படுத்தப் பட்ட பின்னர் இவர்கள் விடுதலையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புல்மோட்டை வர்த்தகர்களுக்கான கருத்தரங்கு

திருக்கோணமலை புல்மோட்டை முஸ்லிம் மத்திய பாடசாலையில் கிரம அலுவலர் சாதிக்கின் தலைமையில் விலைக்கட்டுப்பாட்டு நடைமுறைகள் தொடர்பான கருத்தரங்கு நிகழ்ந்துள்ளது. இக்கருத்தரங்கில் திருமலை மாவட்ட விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரிகள் நசீர் மற்றும் ஜெனபர் சாதிக் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். விற்பனைப் பொருட்களின் விலைப் பட்டியல்களைத் தமது தளத்தில் காட்சிப்படுத்துவது, தரமான பொருட்களை மட்டும் விற்பனைக்கிடுவது போன்றவற்றுடன் கட்டுப்பாட்டு விலைகளில் பொருட்களை விற்பது தொடர்பாகவும் அறிவுறுத்தப்பட்டனர். இவற்றை மீறும் விற்பனையாளர்களுக்கெதிரான சட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது. இக்கலந்துரையாடலுக்கு புல்மோட்டை வியாபாரிகள் சங்கத் தலைவா அனஸ் மற்றும் செயலாளர் ரிசான் உட்பட அனைத்து வர்த்தகர்களும் நுகர்வோர் பலரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முன் எழுந்து நிற்கும் தமிழரின் தலைவிதிக்கேள்வி – எவ்வாறு ?

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

கடந்த மூன்று கட்டுரைகளினூடாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கு (Vision) , கூற்று (Mission) ஆகியன பற்றியும், அவற்றை அடைந்து கொள்ளும் குறிக்கோள்களின் மேலோட்டமான விடயங்கள் பற்றியும் ஆராய்ந்தோம். இக்கட்டுரையில் 'எவ்வாறு' எனும் தந்திரோபாயம் பற்றிப் பேசுவோம். தந்திரோபாயங்கள் (Strategies) என்றால் என்ன? என்று பலரும் பல ஆங்கிலப் புத்தகங்களில் கோடிட்டு விளக்கங்கள் தர முற்படலாம். ஆனால் எமக்கு, அதாவது தமிழருக்கு தந்திரோபாயம் பற்றி எவரும் சொல்லித்தரத் தேவையில்லை. ஏனெனில் எமக்கெல்லோருக்கும் 'பாட்டி' வடை சுட்ட கதை தெரியும். அக்கதையில் வடையைக் காகம் பற்றிக்கொண்டு பறந்ததும், அதன் பின் நரி அவ்வடையைக் கைப்பற்ற மேற்கொண்ட குள்ளத்தனமுமே இங்கே தந்திரோபாயங்களாகக் கொள்ளப்பட வேண்டும்.

முதலில் எவ்வாறு காகம் வடையைத் தூக்கத் தீர்மானித்தது என்பதைப் பார்ப்போம். அதாவது காகம் பாவிக்க முயற்சித்த தந்திரோபாயம் எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதை ஆராய்வோம்.

முதற்படியாக வடையைத் தன்னால் தூக்க முடியுமா? எனும் தீர்மானத்தைக் காகம் மேற்கொண்டிருக்கும். இத்தீர்மானத்திற்குத் தனது பலத்தை அது புரிந்து கொண்டிருக்க வேண்டும். (Strength) அவ்வடையைத் தூக்கப் பலமிருந்ததால் மட்டுமே காகம் வடையைக் குறி வைத்தது. அவ்வாறில்லாவிடில் அதவிடக் குறைவான பாரமுள்ள, தனது பலத்தால் தூக்கக் கூடிய இலக்கினை காகம் தேர்வு செய்திருக்கும். எனவே தந்திரோபாயத் தேர்வுக்கான முதற்படியாக தமது பலத்தை அத் தந்திரோபாயத்தைப் பிரயோகிப்பவர்கள் புரிந்து கொண்டிருக்க வேண்டிய தேவை எழுகின்றது. அடுத்து வடையைத் தூக்கிக் கொண்டு நடக்கவோ அல்லது நிலத்தில் நிற்கவோ காகம் யோசிக்கவில்லை. உடனடியாகப் பறந்து உயர்ந்த நிலையொன்றில் இருக்கக் காகம் தீர்மானித்தது. ஏனெனில் தரையில் நடப்பதும், தரையிலுள்ள ஏனைய எதிரிகளுடன் சண்டையிடுவதும் காகத்திற்குப் 'பலவீனம்' (Weakness) விடயமே. அவ்வாறு செய்தால் நிச்சயமாக பற்றிய வடையை இழப்பதுன் படுகாயமடைய வேண்டியும் இருக்கலாம். ஆகையால் காகம் அதனை மேற்கொள்ளவில்லை. அதாவது காகம் தனது பலவீனத்தையும் தெரிந்து கொண்டு அப்பலவீனத்தைத் தவிர்த்துவிடும் நடவடிக்கைகளை முன்னரே எடுத்துவிட்டிருந்தது.


தமது பலத்தையும், பலவீனத்தையும் அறிதல் என்பது எமது சமயத்தின் படி உள்ளகப் பார்வையாகவோ, அல்லது சாக்கிரடீசின் தத்துவ விசாரத்தின் படி உன்னையே நீ அறிவாய் என்பதாகவோ, அல்லது முகாமைத்துவத்தின் படி உள்ளக ஆய்வாகவோ (Internal Analysis) அல்லது வேறு எவ்வதமாகக் கூறப்பட்டிருப்பதாகவோ கொள்ளலாம். ஆனால் இங்கு இடித்துரைக்கப்படும் விடயம் என்னவெனின் தந்திரோபாயப் பிரயோகத்திற்கான அடிப்படை அத் தந்திரோபாயங்களை பிரயோகிப்பவரின் பலத்தையும் பலவீனத்தையுயம் அவர் அக்கு வேறு ஆணி வேறாக அறிந்திருக்க வேண்டும் என்பதே.

மூன்றாவதாகக் காகம் ஏன் பாட்டியைத் தேர்வு செய்தது? என்பது கவனிக்கத்தக்கது. வயதான பாட்டியின் கவனம் அடுப்பிலும், தயாரிப்பதிலும், பொரிப்பதிலும், இறக்கி ஆறவிடுவதிலும் மாறி மாறிக் குவியும் போது இலகுவான 'வாய்ப்பு' (Opportunity)ஒன்று அங்கே காணப்படுவதுடன் உடனடியாக எதிர்த்தாக்குதல் (Counter attack) நடவடிக்கைகள் குறைவாகவே இருக்குமென்பதும் ஆகும். மனிதரின் கவனம் ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களிற் சிதையும் போது மனிதப் பலவீனம் தாமாக முன்னிலை பெற்று விடுகின்றது. எனவே காகம் எதிராளியின் பலவீனத்தை அறிந்து அதனைத் தனக்கு வாய்ப்பாக்கிக் கொண்டது கவனிக்கத்தக்கது.

நான்காவதாக எவ்வாறான பயமுறுத்தல்களைக் (Threats) காகம் எதிர்கொள்ள வேண்டியிருந்திருக்கலாம் என்பதைக் கவனிக்க வேண்டும். பாட்டியின் வேகத்தை ஏற்கனவே மதிப்பிட்டுவிட்ட காகம் பயமுறுத்தலாகக் கருதிய விடயம் வாடிக்கையாளர்களாக இருக்கலாம். வாடிக்கையாளர்கள் அதிகம் இருப்பின் பயமுறுத்தலும் அதிகமாக இருக்கும். எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட நேரம் பயமுறுத்தலைக் குறைக்கும் அதேவேளை பாட்டியின் வலுவையும் குறைக்கும் நேரமாக, அதாவது கண்பார்வை குறைந்த மாலை நேரமாக அமைந்திருக்கும்.

இவற்றிலிருந்து காகம் தனது வடையைத் தூக்கிச் செல்லும் நோக்கினை அடைவதற்கான தந்திரோபாயத்தை வகுக்கும் போது, தனது பலம், பலவீனம், வாய்ப்புக்கள், பயமுறுத்தல்களைக் கவனத்திற் கொண்டே நடவடிக்கைகளை நிகழ்த்தியிருக்கும்.

எனவே, தந்திரோபாயங்களை வகுக்கும் போது, இந்நான்கு காரணிகளையும் கவனத்திற் கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராயிருக்க வேண்டும்.



ஆனால், இந்நான்கு காரயிகளுக்கும் மேலதிகமாகத் தனது திட்டம் எதிர்பாராக் காரணிகளால் தவிடுபொடியாகும் போது, வேறோர் திட்டமும் காகத்திடம் இருந்திருக்கும். அத்திட்டமானது வடையைக் கைப்பற்ற முயலும் போது எதிர்பாராக் காரணியொன்றால் தான் பலவீனமாகும் போது தனது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதை நோக்காகக் கொண்டு வடையைப் போட்டு விட்டுக் கிடுக்கிப் பிடியிலிருந்து தப்பிச் செல்வதே ஆகும். இதனை நாம் பாதுகாப்புத் திட்டமிடல் (Contingency planning) என்கின்றோம்.


மேற்சொன்ன விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நரியின் தந்திரோபாயம் எப்படியிருந்தது என்பதை நீங்களே ஆராய்ந்து கொள்ளலாம்.

எனவே, தமிழர் பிரச்சினைக்கான தீர்வை எட்டும் கலந்துரையாடல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தந்திரோபாயங்களை எவ்வாறு நகர்த்தப் போகின்றது என்பதைத் தீர்மானிக்கும் ஐந்து காரணிகளாக அதன் பலம், பலவீனம், வாய்ப்புக்கள், பயமுறுத்தல்கள் போன்றவற்றுடன் பாதுகாப்புத் திட்டமிடலும் சேர்ந்து நிற்கின்றது. அவற்றை நாமும் விரிவாக.......

அடுத்த கட்டுரையில் விவாதிப்போம்......

– மாயன் –

## மூதூரில் மழை வேண்டித் தொழுகை



மூதூரில் "ஸ்திஸ்க்கா" என்னும் மழை வேண்டி தொழும் தொழுகையில் பெருந்தொகையானோர் ஈடுபட்டனர்.

மூதூர் பிரதேச கதீப்மார்கள் நலம்புரிச் சங்கத்தினால் மூதூர் பொது மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட இத்தொழுகையை மௌலவி ஆர்.எம்.ஹஸைன் தலைமை தாங்கி நடத்தினார்.

இத்தொழுகையில் மூதூரைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

உங்கள் கேள்விகளுக்கு மலைமாடன் பதில் தருகின்றார். கேள்விகளை மலைமுரசிற்கு தபாலிலோ அல்லது மின்னஞ்சலிலோ அனுப்பிவையுங்கள்.




## யார் செய்தது?

மேன்காமம் அபிராமி அம்மன் ஆலயம் புதன்கிழமை 05.09.2012 இரவு இனம் தெரியாதவர்களால் சேதமாக்கப் பட்டள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இதனை செய்ததாக ஆளும்தரப்பு தமிழ் வேட்பாளர்கள் தெரிவித்துள்ளனர். காலையில் இவ்விடத்தில் சோதனை செய்த பொது மக்கள் பொலிசார் ஒருவரின் அடையாள அட்டை பயணப்பொதி கையடக்க தொலைபேசி என்பனவற்றை கண்டெடுத்துள்ளனர். மூதூர் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். முன்னைநாள் கிழக்கு மாகாண தமிழ் அமைச்சர் இவ்விடயத்தில் தலையீடு செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவங்களின் வெண்கூடு அல்லது ஆசிரியர்களுக்கு நன்றி

நெல்லிமரப்பள்ளிக்கூடத்தில் 3ம் ஆண்டு வரை படித்த நான் வேதக்கோவில் கிராமத்துப் பள்ளிக்கூடத்திற்கு 4ம் ஆண்டுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டேன். தற்காலிகமான அந்தப்பள்ளிக்கூடம் வசதிகள் மிகக்குறைந்ததாக இருந்தது. இலவச உணவு,(பணிஸ் - பால்) என்பன வழங்கப்பட்ட காலம். அதன் பெறுமதியை மாணவர்களாகிய நாங்கள் அப்போது உணரவில்லை. சதுரமான அந்த பணிஸ் ருசியற்றுமிருந்தது. அந்தபணிசை நசித்து உருண்டையாக்கி பந்தடிப்பது போல் அடித்து விளையாடி யிருக்கிறோம்.

நோஞ்சானான என்னை படிப்பிப்பதற்கு எனது தகப்பனார் விரும்பினார். நான் எனது தகப்பனாரின் தங்கை வாழ்க்கைப்பட்ட ஊரிலுள்ள சுளிபுரம் விக்ரோறியக் கல்லூரிக்கு இடமாற்றப்பட்டேன். எனது விடுகை அறிக்கை கூட வெறும் பேப்பரில் எழுதப்பட்டே விக்ரோறியாக் கல்லூரிக்கு அனுப்பப்பட்டது. பிறப்புச்சான்றிதழ் கிடைக்கவில்லை. ஆண்களும் பெண்களும் என நிறையப்பேர் கல்விகற்ற ஒரு பிரமாண்டமான கல்லூரியாக அக்கல்லூரி விளங்கியது. தமிழரசுக்கட்சி திரு.அ.அமிர்தலிங்கம், முன்னாள் தபால் தொடர்புகள் அமைச்சர் செல்லையா குமாரசூரியர் ஆகியோர் இக்கல்லூரிப் பழைய மாணவர்கள் என்பதை பிற்காலத்தில் நான் அறிந்து கொண்டேன்.

ஒரு வருடம் எனக்கு அங்கு கல்வி கற்கக் கிடைத்தது. 5ம் ஆண்டு 3ம் தவணைப்பரீட்சையிலும் நான் முதலாம் பிள்ளையாக வந்தேன். இதற்கு எனது திறமையை விட அன்றைய நிலமையும் ஒரு காரணம். மேற்படி கல்லூரியில் கத்தோலிக்க பாடம் படிப்பிக்கப்படுவதில்லை. எனது மைத்துனர் உட்பட குறைந்தது 5 மாணவர்களே முழுக்கல்லூரி மாணவர்களில் (R.C) கத்தோலிக்கராயிருந்தோம். எட்டுப்பாடப் புள்ளிகளை (இந்துசமயம் உட்பட) எட்டால் வகுத்து வந்த சராசரிப் புள்ளிகளை விட மொத்தப்புள்ளிகளை 7 ஆல் (R.C பாடம் இல்லாததால்) வகுத்தமையால் நான் சராசரிப் புள்ளிகளை அதிகம் பெற்றேன். அதனால் வகுப்பில் முதலாம் பிள்ளையாக வரமுடிந்தது. அசெம்பிளியில் வைத்து அதிபரின் கையால் தேர்ச்சி அறிக்கையை வாங்கும் சந்தர்ப்பம் 3 தடவைகள் எனக்குக் கிட்டிற்று.

இதனால் இரண்டாவதாக வந்த மாணவி ஒருவரால் நான் மனக்கஸ்டங்களை அனுபவித்தேன். மேற்படி பாடசாலையை விட்டு விலகும் எண்ணம் மேலோங்கியது. மிகவும் பிடிவாதத்துடன் எனது தந்தையாரின் ஊர்வந்தேன். சில தவிர்க்கமுடியாத காரணங்களினால் தென்மராட்சிலிருந்து எமது குடும்பம் வடமராட்சிக்குப் புலம் பெயர்ந்திருந்தது.

எனது தகப்பனாரின் தகப்பனார் திருக்கோணமலையைச் சேர்ந்தவர். கொட்டியாரம், தம்பலகாமம் என எமக்கு உறவுகள் பல இருந்தன. எனது மனைவியின் தகப்பனாரின் தாயார், எனது பாட்டனாரின் கூடப்பிறந்த சகோதரி அவர்கள் திருக்கோணமலையைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். நான் எனது சொந்த மச்சாளையே திருமணம் செய்யக் காலம் உதவியுள்ளது.

வடமராட்சியில் திரு இருதயக் கல்லூரியில் நான் 6ம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டேன். எமது ஊரிலிருந்து 3 மைல் தொலைவிலுள்ள அந்தக்கல்லூரிக்கு கால் நடையாகச் சென்று படிக்கத்தொடங்கினேன். எமது ஊரிலிருந்து பத்துக்கு மேற்பட்டவர்கள் கல்விக்காக அக்கல்லூரிக்கு சென்று வந்தார்கள். இரு நேரப்பாடசாலை, 3.15 வரை பாடங்கள். இரண்டு இடை வேளைகள். சீருடை அறிமுகமில்லாக் காலம் ஒரே கால்சட்டையை ஒரு வாரம் அணிவேன். சகமாணவர்களது நிலையும் அதே -

6ம் ஆண்டு முதல் தவணையில் மற்ஸ் (கேத்திர + அட்சரகணிதம்) பாடத்தில் 94 புள்ளிகள் எடுத்திருந்தேன். எண்கணிதமும் அப்போது பாடமாக இருந்தது. சவிரிமுத்து மாஸ்ரர் எமக்கு கணித ஆசிரியர். 93 புள்ளியை மனுவற்பிள்ளை மாஸ்ரரின் மகன் பெனடிக்ற் பெற்றுக்கொண்டான். இருதயதாஸ் எனும் மாணவனுக்கும் 93 புள்ளிகள். இருதயதாஸ் அப்போது 'புன்னகை' என்னும் கையெழுத்துச் சஞ்சிகை ஒன்றை நடத்திக்கொண்டிருந்தான். துப்பறியும் கதைகளால் தனியொருவனாக அச்சஞ்சிகையை நிரப்பிக் கொண்டிருந்தான்.

விக்ரோறியாக் கல்லூரியில் படிக்கும் காலத்தில் கல்கியில் வெளிவந்த அகிலனின் புதுவெள்ளம் தொடர் நாவலையும் "நரி வேட்டை" சித்திரக் கதைகளையும் வாசிக்கத் தொடங்கியிருந்தேன். குமுதத்தில் வெளிவந்த ரா.கி.ரங்கராஜனின் "படகு வீடு" சாண்டியல்யனின் "யவனராணி" என்பவற்றையும் வாசிக்கக் கிடைத்தது. பி.எஸ். ராமையாவின் சில கதைகளை குமுதத்தில் வாசித்தேன். அப்போது அவரை மணிக் கொடிக்காரராக தெரியாது. அது பற்றிய பிரக்ஞையும் எனக்கில்லை. துப்பறியும் கதைமோகம் என்னைப்பற்றி இருந்தது. மேதாவி சிரஞ்சீவி டி. எஸ்.ராமச்சந்திரன், நாஞ்சில் பி.டி சாமியின் பரமரசிகன். நான் மண்ணெண்ணை விளக்கை தலை மாட்டில் வைத்து படுத்திருந்து நல்லிரவு வரை வாசித்த புத்தகங்கள் இவைதான்.

விடுமுறைநாட்களில் சுழிபுரம் அல்லது நல்லூர் செல்வோம். என் தகப்பனாரின் மூத்த சகோதரின் மூத்த மகள், சின்னத்தம்பி என்ற ஒருவரை திருமணம் செய்திருந்தார். அவர்களின் மூத்தமகனின் பெயர் புரட்சிதாசன். கோவில் வீதியில் அவர்களது வீடு. புரட்சிதாசனுக்குப் பின்னர் ஜனதா, சுரதா என இரண்டு பிள்ளைகள்.

சின்னத்தம்பி அண்ணர் வீட்டிற்கு நாங்கள் போனால் எங்களுக்கு தேனீருக்குப் பதிலாக சோடா .கிடைக்கும் எனது [illegible] நான் நவமணி அக்கா என்று தான் கூப்பிடுவேன். "அடிமை விலங்கறுப்போம்" என ஒரு துண்டுப்பிரசுரம் நவமணி அக்கா வீட்டில் கட்டுக்கட்டாக கிடந்ததை நான் அவதானித்துள்ளேன். அவர்களது வீட்டின் விறாந்தைக் கதவின் மேல் கிறில்கல் ஒன்று வைத்துக்கட்டப்பட்டிருந்தது. அரிவாளும் சுட்டியலும் தான் அந்தக்கிறில்கல்.

சின்னத்தம்பி அண்ணர் வீட்டு மேசையில் தாமரை, சரஸ்வதி சஞ்சிகையையும் அவதானித்துள்ளேன். புரட்சிதாசனால் போத்தில் வாயரென கிசுகிசுக்கப்பட்ட ஒரு மனிதனை அடிக்கடி அவர்கள் வீட்டில் நான் கண்டிருக்கிறேன். ஆயினும் 10வயது நிரம்பிய எனக்கு விளையாட்டுப்பருவம். பெரிய சில்லுகள் பூட்டப்பட்ட முன்னும் பின்னும் இரும்புக்கரியிலில் சோடா போத்தல்களை கடைகளுக்கு விநியோகித்து களைத்து விழுந்து வரும் சின்னத்தம்பி அண்ணர் ஒரு சீலை போட்ட ஈசிச் செயரில் சாய்ந்திருப்பார். விளையாட்டை நிறுத்தி நாம் ஒதுங்கிக்கொள்வோம். ஆவணி நல்லூர்த் திருவிழாவில் அவரது பெட்டிக்கடை என்று நல்லூர் வீதியில் அமைக்கப்படும். புரட்சிதாசனோடு நானும் அக்கடையில் வியாபாரம் செய்வேன். ஆவணி பாடசாலை 2ம் தவணை லீவில்தான் நல்லூர் திருவிழா வரும். சின்னத்தம்பி அண்ணர் கதைகள் எழுதுவதாக நான் அறிந்தகாலத்தில் தான் 'அடிமை விலங்கறுப்போம்' துண்டுப்பிரசுரம் (சிறிய புத்தகம்) அவரால் எழுதப்பட்டதென அறிந்தேன். எனது தகப்பனார் சின்னத்தம்பி அண்ணரைப் பற்றிக் கதைக்கும் போது தானியல், தானியல் என்று தான் கதைப்பார். அந்த சின்னத்தம்பி அண்ணர்தான் கே.டானியல். அங்கு அவரைத்தேடி வந்தார் V.பொன்னம்பலம். நிச்சயமாக நான் கே.டானியலை அப்போது வாசித்திருக்கவில்லை.

6ம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த ஒரு நாள்... எனது தகப்பனார் வந்திருப்பதாக பியோனாக கடமையாற்றும் யேசுதாசன் வந்து சவிரிமுத்து மாஸ்ரரிடம் கூறி என்னை அழைத்துச் சென்றார். காதுகேளாத எனது தகப்பனார் அதிபரின் அறைவாசலில் நின்று கொண்டிருந்தார். தபாலில் வந்திருந்த எனது பிறப்புச்சான்றிதழை ஒப்படைக்கவே அவர் வந்திருந்தார்.

தொழில் சாதனங்களுடன் சேட் அணியாமல் வெறும்மேல் சகிதம் வந்திருந்த அவரை கண்ட எல்லோருக்கும் பிறப்புச்சான்றிதழ் இல்லாமலேயே நான் யார் என்பது தெரிந்துவிட்டது. அந்தக்காலத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் தகப்பனாரின் தொழில் என்னும் இடத்தில் பெரிய எழுத்தில் சாதித்தொழில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

வெண்கூடு தொடரும்

-நந்தினி சேவியர்-


On Line Recharge

VIDEOCON

airtel digital TV

SUN DIRECT

dishtv

புதிய இணைப்புக்களை உடனே பெற்றுக்கொள்ளலாம்.

விற்பனைக்குப் பின்னரான மிகச்சிறந்த சேவை

உடனே நாட வேண்டிய இடம்

New Trinco Stationery No.27,3rd Cross Street,Trincomalee. 0262223071

திருமலையில் முதன் முறையாக DHL



தற்போது DHL மூலமாக
- உணவுப் பொருட்கள்
- உடைகள்
- பரிசுப் பொருட்கள்
- வாழ்த்து மடல்கள் மற்றும்
- முக்கிய ஆவணங்களை அனுப்பமுடியும்.

இதற்கு நீங்கள் நாடவேண்டியது.

SS DIGITAL'S
58, Vidyalayam Road, Trincomalee.
Hot Line: 026 2224933 / 0773663103

DHL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுத் துறையால் முதன்மையுறும் வைதேகி மதியழகன்



சாதனைகள் என்பது எவ்வளவு கடினமானதோ அது போல சாதனையாளர்களை சாதாரண மானவர்களிடமிருந்து பிரித்தறிதலும் அவ்வாறுதான் இருக்கும் போலத் தெரிகிறது. இருந்தாலுமென்ன வலிகளை பொறுத்தலும், தடைகளை நகர்த்தலும் மலைமுரசு விரும்பி ஏற்றுக் கொண்ட ஒன்றுதானே. தொடர்ந்து வரும் அறிமுகத்தில் இவ்வாரம் மலைமுரசு வைதேகி மதியழகனை அறிமுகஞ் செய்கிறது.

19 வயதான வைதேகி மதியழகன் பேச்சுத்துறையில் மிகுந்த ஈடுபாடும் தேர்ச்சியும் கொண்டவர். சிறு வயதிலிருந்தே மேடைகளை அழகுகரித்தமையால் தன் நாவன்மையால் சபையோரை ஈர்க்கக் கூடிய நுட்பத்தை தன்னிடையே ஏற்படுத்திக் கொண்ட வைதேகி தான் சார்ந்த துறையில் பல்வேறுபட்ட வெற்றிகளை கண்ட ஒருவராவார்.

பாடசாலை காலத்தில் திருமதி. சந்திரகாந்தன், திருமதி. விஜிபாலேந்திரன் மற்றும் திரு. மதியழகன் ஆகியோரின் வழிகாட்டலில் தமிழ்த்தினப் போட்டிகளில் நீளும் வைதேகியின் சாதனைப் பட்டியலை இனிக் காணலாம்.

வலயமட்டம் :- குழு இசை - 1ம் இடம் (2009)
பேச்சு - 1ம் இடம் (2009)

விவாதம் - 2ம் இடம் (2009)
பேச்சு - 3ம் இடம் (2009)
பேச்சு - 1ம் இடம் (2006)
விவாதம் - 2ம் இடம் (2010)
வில்லுப்பாட்டு - 1ம் இடம் (2011)

மகாண மட்டம் :- பேச்சு - 1ம் இடம் (2003)
பேச்சு - 2ம் இடம் (2006)
பேச்சு - 1ம் இடம் (2007)
குழு இசை - 1ம் இடம் (2007)

தேசிய மட்டம் :- பேச்சு - 2ம் இடம் (2003)
பேச்சு - 2ம் இடம் (2007)
குழு இசை - 2ம் இடம் (2007)

மேலும்
2007 - போதைவஸ்து விழிப்புணர்வுப் போட்டி - 1ம் இடம்
2004 - உலக இந்து மாநாடு பேச்சு - 3ம் இடம்
இளைஞர் பேரவை கட்டுரைப் போட்டி - 1ம் இடம்

தன்னுடைய பேச்சுத்திறத்தால் வலய, மாகாண, தேசிய மட்ட பேச்சு, விவாதம், இசை போன்ற போட்டிகளில் முன்னிலை வகித்த வைதேகி "மாணவர்கள் தமதறிவை பாடசாலைக் கல்வியோடு மட்டுப்படுத்திவிடாமல் இணைப்பாட விதானங்களிலும் தேர்ச்சி பெறுவதன் மூலம் சகல துறைகளிலும் எதிர்கால வாழ்க்கையை சிறப்பித்துக் கொள்ள முடியும்" என கூறுகின்றார். அவர் தொடர்ந்தும் வெளிக்கள துறைசார் நிகழ்வுகளிலும் போட்டிகளிலும் ஆர்வம் காட்டுபவராகவே உள்ளார். பேச்சுத் துறையில் இளமையிலேயே சிறந்த முதல்நிலை பதிவுகளையும் மிக்க ஆர்வத்தையும் கொண்டிருக்கும் வைதேகி மதியழகன் தொடர்ந்து தன் திறமையால் உயர்வார் எனக் கூறி முற்றிடுகிறோம்.

-செம்பியன்-
-பத்மன்-

# இலவசக் கவிதைப் பயிற்சிப் பட்டறை

கலை கலாசார அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் (அரங்காடல் குழுவினர்) இலவசக் கவிதைப் பயிற்சிப் பட்டறை வருகின்ற செப்டம்பர் மாதம் 29 மற்றும் 30 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றவிரும்பும் இளையோர் உங்கள் சுயவிபரங்களோடு சிறிய புகைப்படம் (விரும்பினால்) என்பவற்றை அண்மையில் எழுதிய கவிதையொன்றோடு இணைத்து மலைமுரசின் ஆசிரியர்பீட முகவரிக்கு செப்டம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு முதல் (14.09.2012) கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு:
159A, 2வது மாடி, கடல் முக வீதி, திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com, 0754252042
58, வித்தியாலயம் வீதி, திருக்கோணமலை.

# இவ்வாரம் பாரதியின் கவிதைகள்

## தனிமையிரக்கம்

குயிலினாய் நின்னொடு குலவியின் கலவி
பயில்வதிற் கழித்த பன்னாள் நினைந்துபின்
இன்றெனக் கிடையே எண்ணில்யோ சனைப்படும்
குன்றமும் வனமும் கொழுதிரைப் புனலும்
மேவிடப் புரிந்த விதியையும் நினைந்தால்

பாவியென் நெஞ்சம் பகீரெனல் அரிதோ?
கலங்கரை விளக்கொரு காவதம் கோடியோ
மலங்குமோர் சிறிய மரக்கலம் போன்றேன்
முடம்படு தினங்காள்! முன்னர்யான் அவளுடன்
உடம்பொடும் உயிரென உற்றுவாழ் நாட்களில்

வளியெனப் பறந்தநீர் மற்றியான் எனது
கிளியினைப் பிரிந்துழிக் கிரியெனக் கிடக்கும்
செயலையென் இயம்புவல் சிவனே!
மயலையிற் றென்றெவர் வகுப்பரங் கவட்கே?

## சந்திரமதிப் பாட்டு

பச்சைக் குழந்தையடி – கண்ணிற்
பாவை யடி சந்திரமதி!
இச்சைக் கினிய மது:- என்றன்
இருவி ழிக்குத் தேநிலவு;

நச்சுத் தலைப் பாம்புக் குள்ளே - நல்ல
நாகமணி யுள்ள தென்பார்;
துச்சப்படு நெஞ்சிலே - நின்றன்
சோதி வளருதடி!

பேச்சுக் கிடமே தடி! - நீ
பெண்குலத்தின் வெற்றி யடி!
ஆச்சர்ய மாயை யடி! - என்றன்
ஆசைக் குமரி யடி!
நீச்சு நிலை கடந்த - வெள்ள
நீருக்குள்ளே வீழ்ந்தவர் போல்,
தீச்சுடரை வென்ற வொளி - கொண்ட
தேவி நிலை விழந்தேனடி!

நீலக் கடலினிலே - நின்றன்
நீண்ட குழல் தோன்று தடி!
கோல மதியினிலே - நின்றன்
குளிர்ந்த முகங் காணுதடி!
ஞால வெளியினி லே - நின்றன்
ஞான வொளி வீசுதடி!
கால நடையினிலே - நின்றன்
காதல் விளங்கு தடி!

# உலகில் அதிக சோம்பேறிகள் வாழும் நாடுகள்

உலகில் அதிகம் சோம்பேறிகள் அதிகம் வாழும் நாடுகள் தொடர்பாக கருத்துக்கணிப்பொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆபிரிக்க நாடான மால்டா இப்பட்டியலில் முதலிடம் வகிக்கிறது. அங்கு 71.9 வீதமானவர்கள் சோம்பேறிகளாக உள்ளனர். சுவாஸிலாந்து (69 வீதம்) இரண்டாமிடத்தை வகிக்கிறது. சவூதி அரேபியா இப்பட்டியலில் (68.8 வீதம்) மூன்றாமிடத்தை வகிக்கிறது.

ஒரு வாரத்தில் 2.5 மணித்தியாலங்கள் குறிப்பிடத்தக்க உடலுழைப்பில் ஈடுபடாதவர்கள் சோம்பேறிகளாக, செயலற்றவர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

122 நாடுகள் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் இருந்து பிரிட்டன் 8 ஆவது இடத்தில் காணப்படுகின்றது. அங்கு சோம்பேறிகளின் சதவீதம் 63.3 ஆகும்.

இதேவேளை சோம்பேறிகள் குறைந்த நாடாக கிரீஸ் காணப்படுவதாக மேற்படி கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் 15 வீதமானவர்களே செயல்களற்றவர்களாக காணப்படுகின்றனர்.

சேர்பியா, ஆர்ஜன்டினா, மைக்ரோனேஸியா, குவைத் ஆகிய நாடுகள் இப்பட்டியலில் அடுத்த இடங்களில் உள்ளன. அமெரிக்கா இப்பட்டியலில் 46 ஆவது இடத்தில் காணப்படுகின்றது.

ஒட்டுமொத்தமாக ஆண்களைவிட பெண்கள் அதிக செயலற்றவர்களாக காணப்பட்டுள்ளனர்.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுவரும் நிலையில் இக் கணிப்பீட்டு தகவல் வெளியிடப்பட்டுள்ளதானது செயலற்றவர்களாக உள்ள மக்களை சுறுசுறுப்பானவர்களாக இயங்கச் செய்வதற்கு வழிவகுக்குமென கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இலங்கையின் வலைப்பெண் தர்ஜினி சிவலிங்கம்



எட்டாவது ஆசிய வலைப்பந்துப் போட்டிகளில் உலகின் கவனத்தை இலங்கைப் பக்கம் திருப்பிய பெண்ணாக தர்ஜினி சிவலிங்கம் பதிவாகின்றார். 6அடி 9அங்குலம் உயரமான தர்ஜினி கொங்கொங்கிற்கு எதிரான முதலாவது போட்டியில் 75 கோல்களை இலங்கைக்குப் பெற்றுக்கொடுத்திருந்தார். இப்போட்டியில் இலங்கை 81 கோல்களைப் பெற, கொங்கொங் வெறும் 38 கோல்களையே பெற்றிருந்தது. மொத்தமாக தர்ஜினி 78 கோல்கள் போடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்த போது, கொங்கொங் அணியால் அவரை மூன்று தடவைகள் மட்டுமே நிறுத்த முடிந்தது.

இறுதிப் போட்டியில் இலங்கை பெற்றுக்கொண்ட 47 புள்ளிகளைத் தர்ஜினியே பெற்றுக்கொடுத்திருந்தார். இவரது உயரமும், கோல்போடும் திறனும் மிக விரைவில் இலங்கையை ஆசிய சம்பியனாக மாற்றி விடும் என்பது நிச்சயம்.

## பாரா ஒலிம்பிக்கில் முதல் பதக்கம் வென்றது இலங்கை.



இலங்கையின் பிரதீப் சஞ்சய பரா ஒலிம்பிக்கின் இலங்கைக்கான முதல் பதக்கத்தைப் பெற்றுள்ளார். 400M ஓட்டப்போட்டியில் இவர் வெண்கலப் பதக்கத்தை வென்று இலங்கைக்கான முதல் வேட்டையை ஆரம்பித்துள்ளார். இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த இவர் 49.28 செக்கனில் 400M கடந்து மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். ஆஸ்திரியாவின் மற்சிங்கர் 48.45 செக்கன்களில் 400M ஓடி முதலிடத்தையும், நஸிமென்டோ 48.21 செக்கன்களில் இத்தூரத்தை முடித்து இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

## வரண்டு போயுள்ள இலங்கையின் வலைப்பந்துத் துறை

வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் இடைக்காலத் தலைவர் திரு.தாமர கேரத் இலங்கையின் வலைப்பந்தாட்ட திறனை உலகறியச் செய்வதே தனது அடுத்தகாலகட்டத்துக்கான நடவடிக்கையாக இருக்கும் என தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த ஆசிய வலைப்பந்து சம்பியன்ஷிப்புக் கான வலைப்பந்துப் போட்டியின் இறுதிப்போட்டிவரை முன்னேறிய இலங்கை சிங்கப்பூருடன் ஒரு கோலினால் தோல்வியடைந் திருந்தது. உலகத் தரப்படுத்தலில் 811புள்ளிகளுடன் 20ஆவது இடத்திலிருக்கும் சிங்கப்பூருடன் 368புள்ளிகளுடன் 23ஆவது இடத்திலிருக்கும் இலங்கை தோல்வி கண்டிருந்தது. இலங்கையின் வலைப்பந்தாட்டத்தை விருத்தி செய்வதற்குரிய முக்கிய தடை நிதிப்பற்றாக்குறையே என இதன் தற்போதய தலைவர் மேலும் தெரிவிக்கின்றார்.


## காலற்ற வேக ஓட்டக்காரன் – பீக்கொக்.

இங்கிலாந்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பரா ஒலிம்பிக் போட்டியில் 100 M ஓட்டத்தில் பிரித்தானியாவைச் சேர்ந்த ஜொனி பீக்கொக் "உலகின் மாற்றுத்திறன் வேக ஓட்டக்காரராக" தன்னைப் பதிவு செய்துள்ளார். இவர் இத்தூரத்தை 10.85 விநாடிகளில் ஒடிமுடித்து, தனது முன்னைய உலக சாதனையை முறியடித்தார். முன்னர் இவர் இத்தூரத்தை 10.9 செக்கன்களில் ஓடி முடித்திருந்தமையே உலக சாதனையாக இருந்தது.

## அமெரிக்கப் பகிரங்க டெனிஸ்.



அமெரிக்கத் பகிரங்க ரெனிஸ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தின் போது, நோவாக் ஜெக்கோவிக் முன்னேறியுள்ளார். தொடர்ந்து, ஆறாவது முறையாக சேர்பியப் புயலான ஜெக்கோவிக் இப்பட்டத்தை வெல்லும் முனைப்புடன் முன்னேறி வரும் நிலையில், இவர் ஸ்பெயினின் டேவிட் பெரரைச் சந்திக்கவுள்ளார்.



மகளிர் ஒற்றையராட்டத்தில் ஏற்கனவே அமெரிக்கப் பகிரங்கப் பட்டங்களை வென்ற கவர்ச்சிக்கன்னி மரியா சரபோவாவும், கறுப்புக்கன்னி ஷெரீனா வில்லியம்ஸ்"ம் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

# "திருமலை எழுத்தாளர்கள் ஒற்றுமையாய் செயற்பட வேண்டும்"

### எழுத்தாளர் சீ.என். துரைராஜா அவர்களின் பேட்டி

"காலத்தின் கண்ணாடி" என சிறப்பிக்கப்படுபவை இலக்கியங்களாகும். ஒவ்வொரு இலக்கியங்களும் அவை எழுந்த காலச்சூழலை பிரதிபலிப்பனவாயுள்ளன. சமூகத்தில் மாற்றம் ஏற்படுத்தும் வலிமை இவ் இலக்கியங்களுக்கு உள்ளது. இலக்கிய வாதிகளினது சேவையும் போற்றத்தக்கனவாய் உள்ளன.

திருமலையின் இலக்கியவாதிகளுள் ஒருவராய் உள்ளவரும் அன்புவழிபுரத்தை வசிப்பிடமாக கொண்டவருமான 69 வயதுடைய மூத்த எழுத்தாளர் சீ.என். துரைராஜா அவர்கள் மலைமுரசுக்கு செவ்வி ஒன்றை வழங்கியிருந்தார்.

கேள்வி :- இலக்கியத்துறையில் உங்களுக்கு ஆர்வம் உண்டாக காரணமாய் அமைந்தது எது?

பதில் :- 1957-58 காலப்பகுதியிலே நான் மாணவனாக இருந்த காலத்திலே நாடகங்களை எழுதுவதிலும் நடிப்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தேன். அக்காலத்தில் "ஔவையார் நாடகம், குமணவள்ளநாடகம்" எனும் நாடகங்களுக்கு பாடல் எழுதும் வாய்ப்பு கிடைத்தது. மேலும் இறந்தவர்களுக்கான நினைவு மலர்களும் எழுதியிருந்தேன்.

"காகிதப்பூ, மஞ்சளா" எனும் நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பும் ஏற்பட்டது. அதை தொடர்ந்து எனக்கு இலக்கியத்தில் ஆர்வம் ஏற்பட தொடர்ந்து எழுதத் தொடங்கினேன்.

கேள்வி :- உங்கள் கன்னிக்கவிதை எது?

பதில் :- "காக்கையும் குயிலும்" எனும் கவிதையே என் முதலாவது கவிதையாகும். இக்கவிதை தினபதி பத்திரிகையில் 1967ம் ஆண்டு பிரசுரமாகியிருந்ததுடன் பல எழுத்தாளர்களினதும் பாராட்டப் பெற்றது.

கேள்வி :- நீங்கள் எழுத்துத் துறையில் தொடர்ந்தும் முன்னேற துணை நின்றவர் யார்?

பதில் :- என் இளவயதில் என் அயலவரும் நண்பருமான கணேசன் என்பவர் என் படைப்புகளை தொடர்ந்து எழுத துணையாக நின்றதுடன் சமூக சேவைகள் செய்யவும் என்னை ஊக்குவித்தார். ஓவியரான அவரும் நானும் இணைந்து சமூகசேவைகளில் ஈடுபட்டதும் உண்டு.

கேள்வி :- உங்கள் படைப்புகள் மூலம் பெரிதும் எதை சமூகத்திற்கு சொல்ல முற்படுகிறீர்கள்?

பதில் :- நான் அறிஞர் அண்ணாவின் கருத்துக்களைப் பின்பற்றுபவன் அவரின் கருத்தை ஒத்தாகவே என் கருத்துக்களும் அமைகிறது அவ்வகையில் என் படைப்புக்கள் மூலம் பெரிதும் சமூகத்தின் முன்னேற்றம் பற்றியும் தமிழரின் முன்னேற்றம் பற்றியும் கூற முற்படுவதுண்டு.

என் சில கவிதைகளிலும் கட்டுரைகளிலும் சாதி ஒழிப்பு பற்றி கூறி உள்ளேன்.

இனப்பிரச்னை இடம்பெற்ற காலத்தில் போரின் மூலம் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும் என் எழுத்து மூலம் வெளிப்படுத்தியதுண்டு.

ஆரம்ப காலத்திலே திருஞானசம்பந்தர் வீதியில் "மறுமலர்ச்சி மன்றம்" எனும் அமைப்பை என் நண்பர்களுடன் இணைந்து ஆரம்பித்து சாதி ஒழிப்பு கருத்துக்களை வெளிப்படுத்தியும் உள்ளேன்.

(மிகுதி அடுத்தவாரம்)

- பத்மன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Leader

### ரிசானா நபீக்கின் கோரிக்கையை நிராகரித்தார் ஜனாதிபதி.

சவுதி அரேபியாவில் மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப்பெண் ரிசானா நபீக்கிற்காக சவுதி நீதி மன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்கு தேவையான நிதியுதவியினை வழங்க ஜனாதிபதி அலுவலகம் மறுத்துள்ளது. ரிசானாவிற்காக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மேன்முறையீட்டுக்காக நிதி திரட்டப்பட்டு வருகிறது. அவ்வகையில் இலங்கை ஜனாதிபதியிடம் நிதியுதவியளிக்குமாறு விடுவிக்கப்பட்ட கோரிக்கையை ஜனாதிபதி அலுவலகம் நிராகரித்துள்ளது.

### தனியார் கல்வி நிலையங்களுக்கு ஆப்பு

இன்னும் இரு வருடங்களில் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களையும் மூடி விடுவதற்கான நடவடிக்கைகளை தற்போதிலிருந்து எடுக்கவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார். அவரது கூற்றுப்படி "பரீட்சை வினாத்தாள்களில் எவ்விதமான குறைபாடுகளும் இல்லை அவற்றில் குறைபாடுகள் இருப்பதாக தனியார் கல்வி நிறுவனங்களே கதை கட்டியுள்ளனர். வினாத்தாள்களின் வினாக்கள் பாடசாலை பாடத்திட்டத்திற்கமைவாக தயாரிக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது. தனியார் கல்வி நிலையங்களே பாடத்திட்டத்தையும் தாண்டி வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளதாக வதந்திகளை பரப்புகின்றனர்".

### "என்னைச் சபியுங்கள்" எனக்கு கவலையில்லை

### — அமைச்சர் மேவின்சில்வா —

கோயில்களில் மேற்கொள்ளப்படும் மிருக வதைக்கெதிராக தான் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக தன்னை சபித்தாலும் அல்லது தனக்கெதிராக வேள்விகள் செய்தாலும் தான் அதைப்பற்றிக் கவலைப்படப் போவதில்லை என தெரிவித்துள்ளார். நான் மட்டுமே மிருகவதைக்கெதிராக குரல் கொடுத்த அமைச்சர் ஆவேன் எனவும் தெரிவித்துள்ள அவர் ஏனைய எந்தவொரு அமைச்சரும் குரல் கொடுக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டியும் உள்ளார்.

## The Sunday Times:

### கொழும்பு கோட்டையில் பாரிய திட்டமொன்றை இந்திய கம்பனி பெற்றுள்ளது.

கொழும்பின் மிக முக்கிய பிரதேசத்தில் உள்ள நிலப்பகுதி ஒன்று 99 வருட குத்தகைக்கு ரூபா. 49 பில்லியனுகு மேற்பட்ட தொகைக்கு இந்திய கம்பனி ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. சனாதிபதியின் சிபார்சினை மந்திரிசபை உறுதி செய்ததை அடுத்து மேற்கூர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. "கலப்பு அபிவிருத்தி "திட்டமாகவே இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக டில்லியில் பதிவு செய்யப்பட்டு இலங்கையில் சேய்க்கம்பனியைக் கொண்டுள்ள இந்தியக் கம்பனி தெரிவித்துள்ளது. இலங்கை ஜனாதிபதியின் கூற்றுக்கு இணங்க இத்திட்டம் பொது தனியார் கூட்டுமுயற்சி (Public - Private) ஆகத் தொழிற்படும் எனத் தெரியவருகின்றது.

### முன்னேஸ்வரம் கோவிலுக்குள் நுழைய மிருகங்களுக்குத் தடை

நேர்த்திக் கடனை நிறைவேற்றுவதற்காக முன்னேஸ்வரம் கோவிலுக்கு மிருகங்களைப் பலியிடுவதற்காக கொண்டு செல்வது தடுக்கப்பட்டுள்ளது. காவல்துறையால் முன்னேஸ்வரம் கோவிலிலிருந்து சுமார் 50 மீற்றருக்கு முன் நிறுவப்பட்டுள்ள காவல்துறைத் தடைகளை தாண்டி பக்தர்கள் மிருகங்களை எடுத்துச் செல்வது தடுக்கப்பட்டுள்ளது.

### பீரிஸ் லண்டனில் பேசுகிறார்.

இலங்கையின் உல்லாச விடுதித் தொழிற்துறையினர் கடந்த வாரத்தில் பிரித்தானியாவினால் வெளியிடப்பட்ட இலங்கையின் சுற்றுலாதுறை தொடர்பான அறிவுறுத்தல் மீது கடும் கவனம் செலுத்தியுள்ளனர். அதை தொடர்ந்து வெளிவிவகார அமைச்சர். G.L.பீரிஸ் தெஹ்றானிலிருந்து லண்டன் நோக்கிப் பயணமாகியுள்ளார். "பிரித்தானியாவின் கூற்றானது சுற்றுலாப் பயணத் தொழிற்துறையின் மீது சில தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தாலும் சுற்றுலா பயணிகளின் வருகையில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை" என உல்லாச விடுதித் தொழிற்சங்க தலைவர் தெரிவித்துள்ளார்.

### ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

01. நெற்பயிரைச் சேதமாக்குவது எது?
   1. பனிப்பூச்சி  2. அழுக்கணவன்  3. மீலிமூட்டைப் பூச்சி
02. கீழ்வரும் இசைக்கருவிகளில் தோற்கருவி அல்லாதது?
   1. மிருதங்கம்  2. வீணை  3. தவில்
03. அரச இலச்சனைக்குள் அடங்காதது எது?
   1. நிறைகலசம்  2. நெற்கதிர்  3. அரசமரம்
04. மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் இடம் எது?
   1. திருகோணமலை  2. கொழும்பு  3. மட்டக்களப்பு
05. இறக்குமதி செய்யப்படும் பழவகைகளில் ஒன்று
   1. அப்பிள்  2. திராட்சை  3. வாழைப்பழம்
06. பொருத்தமான அளவீட்டைத் தெரிக.
   1050cm + 250cm = ________
   1. 1250cm  2. 1075cm  3. 1300cm
07. ஒரு மைதானத்தில் நான்கு மற்றும் இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மொத்த எண்ணிக்கை 100 ஆகும். அவற்றின் சக்கரங்களின் மொத்த எண்ணிக்கை 260 ஆகும். எனின் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நான்கு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை யாது?
   1. 70  2. 30  3. 50
08. அசினின் வயது, சூரியாவின் வயதைவிட 3மடங்கு அதிகம் ஆகும். இருவர் வயதுகளின் கூட்டுத்தொகை 60 எனின், சூரியாவின் வயது எத்தனை?
   1. 40  2. 15  3. 45

**கீழ்வரும் வரியை வாசித்து 9,10ம் கேள்விகளுக்கு விடையளிக்கவும்.**

கமலன், அனிதாவின் சகோதரனாகும். அனிதாவுக்கு ஒரு அண்ணாவும், இரண்டு தங்கைகளும் ஒரு தம்பியும் உண்டு.

09. கமலனுக்கு எத்தனை சகோதரர்கள் உண்டு?
   1. 1  2. 2  3. 3
10. கமலனுக்கு எத்தனை சகோதரிகள் உண்டு?
   1. 4  2. 3  3. 2
11. பின்வரும் கோவையில் சரியானதைத் தெரிக.
   1. 5*2=20/2  2. 12*6=7*12  3. 8#5=10*3
12. ஒன்று தொடக்கம் இருபது வரை எண்களை எழுதும் போது 1 எனும் இலக்கம் எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?
   1. 12  2. 11  3. 8
13. பாடசாலையொன்றில் கற்கும் 3945 மாணவர்களில் 1989 பேர் பெண்கள் எனின் ஆண்களின் எண்ணிக்கை யாது?
   1. 1956  2. 1856  3. 2956
14. 9kg 800g மாவில் இருந்து 4kg 650g எடுக்கப்பட்டு பின் 3kg 750g சேர்க்கப்பட்டது எனின் தற்போதுள்ள மாவின் அளவு யாது?
   1. 8kg 900g  2. 13kg 700g  3. 8kg 850g
15. முதல் 5 இரட்டை எண்களின் கூட்டுத்தொகை யாது?
   1. 30  2. 28  3. 26

### அப்பிள் நிறுவனத்திற்கு 105 கோடி டொலர் நஷ்ட ஈடு வழங்க சம்ஸுங் நிறுவனத்திற்கு உத்தரவு



தென்கொரியாவின் சம்ஸுங் இலத்திரனியல் நிறுவனமானது அமெரிக்காவின் அப்பிள் இலத்திரனியல் நிறுவனத்திற்கு சுமார் 105 கோடி டொலர் நட்ட ஈடு வழங்க வேண்டுமென அமெரிக்க நீதிமன்றமொன்று தீர்ப்பளித்துள்ளது.

தனது ஐபோன் மற்றும் ஐபாட் தயாரிப்பு நுட்பங்களை பயன்படுத்து சம்ஸுங் நிறுவனம் இலத்திரனியல் பொருட்களை தயாரித்ததாக குற்றம் சுமத்தி கலிபோர்னியா மாநிலத்திலுள்ள நீதிமன்றமொன்றில் அப்பிள் நிறுவனம் காப்புரிமை மீறல் வழக்குத் தொடுத்திருந்தது. இந்த வழக்கிலேயே சம்ஸுங் நிறுவனம் 1.045 பில்லியன் டொலர்களை (சுமார் 13,856 கோடி இலங்கை ரூபா) வழங்க வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த பல தசாப்தங்களில் காப்புரிமை மீறல் வழக்குகளில் விதிக்கப்பட்ட மிகப்பெரிய நட்ட ஈடுகளில் இதுவும் ஒன்றாகும். இத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யவுள்ளதாக சம்ஸுங் நிறுவனம் தெரிவித்துள்ளது. எனினும் இத்தீர்ப்பினால் சம்ஸுங் நிறுவனத்தின் கேள்விக்குரிய இலத்திரனியல் பொருட்களின் விற்பனை நிறுத்தப்படுமா என்பது உடனடியாக தெரியவில்லை.

நன்றி - இணையம்

## வர்த்தமானி அறிவித்தல்கள் 30.08.2012

# நீதிச்சேவை ஆணைக்குழு

திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகரப் பிரதேச செயலாளர் பிரிவு, கிரவட்ஸ், மொராவெவ பிரிவுக்கான **காதிப்பதவிக்குரிய** வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காக முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன்கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள் :**

முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர் ஒருவர் பல்கலைக்கழகப்பட்டம் பெற்றுள்ள ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல்- ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

**அரச பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு**

**நிர்வாக உத்தியோகத்தர் தரத்தில் உதவி வெடிமருந்து கட்டுப்பாட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012**

உதவி வெடிமருந்து கட்டுப்பாட்டாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைக்குத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப் பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்துக் கல்லூரி மாணவன் ...

விளையாடிக்கொண்டிருந்த இவர் இடறி விழுந்த வேளையில் கம்பியொன்றினால் தலையின் முன்நெற்றிப் பகுதியில் பலமாகத் தாக்கப்பட்டிருந்தார். கண்ணுக்கு மிக அருகாமையில் ஏற்பட்ட பாரிய காயத்திலிருந்து கண்கள் தெய்வாதீனமாக தப்பியுள்ளன. இக்காயத்திற்கு 18 தையல்கள் போடப்பட்டதாகக் கூறிய அவரது தகப்பனார் தான் பார்க்கும் போது தனது செல்ல மகனின் உடைகள் முழுவதும் இரத்தம் தோய்ந்திருப்பதைக் கண்டவுடன் மயக்கமடையும் நிலைக்குச் சென்று விட்டதாகவும் கூறினார்.

இவ்வாறே மற்றொரு மாணவனான ரேணுகாந்த் என்பவரும் விழுந்து கையுடைந்த நிலையில் கடந்த வாரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். புலமைப் பரிசிற் பரீட்சைக்குத் தோற்றவிருந்த அம்மாணவனின் வலது கையில் ஏற்பட்ட முறிவு அவரது எழுத்துத்திறனைப் பாதித்திருந்தது. எனினும் மனவுறுதியுடனும், பெற்றோரது விடாமுயற்சியாலும் அம்மாணவன் புலமைப் பரிசிற் பரீட்சைக்குத் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### தீ வைத்துத்...

திருக்கோணமலை மடத்தடி மாரியம்மன் கோவிலடியைச் சேர்ந்த இவர் அஜித்குமார் என்பவரின் மனைவியாவார். 26 வயதான இவருக்கு சுமார் 6 வயது மதிக்கத்தக்க ஆண் பிள்ளையும், 1 1/2 வயதான ஒரு பெண் குழந்தையும் உள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை சுமார் 4.00 மணியளவில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட இவர் உறவினர்களால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அன்று மாலை 4.00 மணியளவில் உயிரிழந்துள்ளார். அவரது உடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு 01.09.2012 சனிக்கிழமை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

### வெற்றியடைந்தது புனித மரியாள் கல்லூரி

மாணவிகளின் மனவுறுதித்தன்மையும், ஆக்ரோசமான விவாதத்திறனும், பதட்டமற்ற அணுகுமுறைகளும் என்னை சாவதானமாக அமரவைத்துவிட்டன" என புனித மரியாள் கல்லூரியின் அதிபர் அருட் சகோதரி நிரோசா (A.C.) மன உவகையுடன் தெரிவித்தார். ஒவ்வொரு மாணவியினதும் விவாத அணுகுமுறைகள் சிறப்பான வேறுபாட்டைப் பதிவுசெய்துள்ளதாகக் கூறிய அவர் அவ் வேறுபாடுகளை ஒன்றாக நோக்கிய போது பலமான விவாத அணியாக இக் குழந்தைகள் காணப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும் இத்தகைய திறனுள்ள பிள்ளைகளை சரியான திசையில் வளர்தெடுக்கவேண்டிய தனது பொறுப்பையும் தான் உணர்வதாக அவர் தெரிவித்தார்.

இவ் விவாதப் போட்டி சக்தி தொலைக்காட்சியினால் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சுமார் பத்து இலட்சம் ரூபாப் பரிசுத் தொகையைக் கொண்ட இவ் விவாதப் போட்டியில் மேலும் மூன்று போட்டிகளை வெல்லுமிடத்து இறுதிவெற்றியை இவ்வணி பதிவுசெய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

விவாதப் போட்டிகளை சக்தி தொலைக்காட்சியூடாக ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை ஐந்து மணிமுதல் கண்டுகளிக்க முடியும்.

### என்னைக் கவர்ந்த...

அதிதியாக உயர்நீதிமன்ற நீதியரசர் கௌரவ பாலேந்திரா சசி மகேந்திரன் அவர்கள் கலந்து கொண்டார்.

இந்நூலானது குவாடலூப்பே அன்னையின் பெருமைகளையும் அன்னையுடன் தொடர்பான வரலாற்றையும் எடுத்தியம்பும் ஒரு அரிய நூலாக இருப்பது சிறப்பம்சமாகும்.

### டோக்கியோ சீமெந்து...

ஏற்பட்ட தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளன. தீயினால் ஏற்பட்ட சேதவிபரங்களின் உண்மைப் பெறுமதியோ, தீ ஏற்பட்டமைக்கான மூலகாரணமோ தற்போதுவரை வெளியாகவில்லை.

### கட்டுப்பாடின்றி உயரும் தேசிக்காய்...

600 ரூபாவிற்கு விற்கப்படுகின்றது. நகர்ப்புறக் கடைகளில் தேசிக்காய் ஒன்றின் விலை தேங்காய் ஒன்றின் விலையளவிற்கு விற்கப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

### எழுவானிற் கலைவிழா

இலக்கிய நாடக மன்றங்கள் மற்றும் நாடகத் தயாரிப்பாளர்களின் ஆக்கபூர்வமான திறமைகளை வெளிக்கொணரும் விதமாக நடாத்தப்படும் இவ்விழா இரு மொழிகளிலும் தனித்தனியாக நடாத்தப்பட்டு வெற்றியாளர்களைத் தேர்வு செய்யும் முகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

பிரதேச, மாவட்ட, மாகாண மட்டப் போட்டிகளாக நடாத்தப்படவுள்ள இவ்விழாவின் வெற்றியாளர்களுக்கு பிரிசில்களும் சான்றிதழ்களும் வழங்க ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிரதேசப் போட்டிகள் 15.09.2012லும், மாவட்ட மட்டப் போட்டிகள் முறையே திருமலையில் 22.09 லும், மட்டக்களப்பில் 23.09 லும், அம்பாறையில் 24.09 லும் நடாத்தப்பட ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சீமெந்தின் விலை...

சீமெந்தின் விலை 80 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு சுமார் 9.4 வீத விலை அதிகரிப்பை பதிவு செய்திருந்தது. இதைத் தொடர்ந்து ஏனைய கட்டுமானப் பொருட்களின் விலை அதிகரிக்கப்படும் வாய்ப்புக்கள் காணப்பட்ட வேளையில் மீண்டும் சீமெந்தின் விலை பழைய நிலைக்கே திரும்பியது.

கிழக்கின் மாகாணசபைத் தேர்தலில் இவ்விலையதிகரிப்பு பாதகமான தாக்கங்களை ஏற்படுத்திவிடலாம் என அஞ்சியே விலைகள் பழைய நிலைமைக்குத் திருப்பப்பட்டதாகக் கூறும் வியாபாரிகள் தேர்தல் முடிவடைந்து வாரகாலங்களுக்குள் சீமெந்தின் விலையில் ஏற்றத்தைக் காண முடியும் என ஆரூடம் தெரிவித்தனர்.

### புல்மோட்டை மூத்தாண்டான்குளம் ஆழப்படுத்தப்பட்டது

புல்மோட்டை மக்களால் குளிப்பதற்கு மட்டும் பயன்படுத்தப்பட்டுவந்த மூத்தாண்டான்குளம் இராணுவத்தினரின் உதவியுடன் ஆழமாக்கப்பட்டுள்ளது. மழையில்லாக் காலங்களில் வற்றிப்போய்விடும் இக்குளம் 12அடிக்குக் மேல் ஆழமாக்கப்பட்டுள்ளதுடன் குளத்தின் அணைக்கட்டு அகலப்படுத்தப்பட்டு வாகனங்கள் செல்லக்கூடியவாறு மாற்றியமைக்கப்பட்டுமுள்ளது.

### கொடகே சாகித்திய ...

திருமலையின் எழுத்தாளர் ஒருவர் பரிசினை வெற்றி கொள்வது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத் தக்கது.

மேலும் சிறந்த கவிதைக்கான விருதை பாலமுனை பாரூக்கின் "தோட்டுப்பாய் முத்தம்மாவும்", நாவலுக்கான விருதை எஸ்.ஏ. உதயனின் - சொடுதாவும்' வென்றுள்ளன.

### திருமலையில் சனாதிபதி ...

அதற்கான திட்டங்களை ஆளுனருக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் வகுத்துக் கொடுத்துவிட்டு மறுநாட்காலையில் திருக்கோணேஸ்வரத் தலப் பயணத்திலும் ஈடுபட்டதைக் காண முடிந்தது.

### குச்சவெளியில் இரண்டாவது ...

இச் சுற்றுலா மைய அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கமாகும்.. இதனடிப்படையில் குச்சவெளிப் பிரதேசத்தின் முதலாவது சுற்றுலா மையமாக 750 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட 'Jungle Beach' எனப்படும் முதலாவது மையம் கடந்த ஆனிமாதத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் திறந்துவைக்கப்பட்டது. இந் நிலையில் இப் பிரதேசத்தில் மேலும் 20 ஏக்கர் நிலத்தில் இரண்டாவது சுற்றுலா மையம் அமைக்கப்பட இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## மலைப்பாம்பின் தாக்குதலுக்குள்ளாகும் கால்நடைகள்



இருபது அடி நீளமான மலைப்பாம்பின் தாக்குதலுக்குப் புல்மோட்டைக் கால்நடைகள் அடிக்கடிப் பலியாகி வந்துள்ளன. சுமார் பன்னிரெண்டு ஆட்டுக் குட்டிகளை இதுவரை விழுங்கியுள்ள ஓர் மலைப்பாம்பு கடந்தவாரம் வசமாகச் சிக்கியுள்ளது. கடந்த 04.09. 2012ல் ஆட்டுப் பண்ணைக்குள் நுழைந்த இம்பாம்பு முதலாவது குட்டியை முழுதாக விழுங்கிய பின் இரண்டாவது குட்டியின் நான்கு கால்களையும் விழுங்கிக் கொண்டிருந்த போது விடிந்து விட்டதால் ஆட்டுமந்தை மேய்ப்பவர் பண்ணைக்குள் வந்தபோது கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக அடித்துக்கொல்லப்பட்ட இப் பெரும்பாம்பைப் பின் பெருமளவு மக்களின் முன் எரியூட்டிதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆசை அதிகரித்தாலேயே இப் பாம்பு மாட்டுப்பட்டதாக மக்கள் பேசிக்கொண்டதைக் கேட்கக்கூடியதாய் இருந்தது.


**ஆங்கில ஆசிரியைகளுக்கான வேலை வாய்ப்பு**

ஆங்கிலத்தில் சரளமாக பேசக்கூடிய இளம் ஆங்கில ஆசிரியைகளுக்கான 2 வெற்றிடங்கள் வேல் வர்த்தக கல்லூரியில் உள்ளது.

சுய விபரக்கோவையுடன் காலை 8.30 தொடக்கம் மாலை 6.00வரை கீழ் காணும் முகவரியில் உள்ள எமது அலுவலகத்தில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றலாம்.

159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி, திருக்கோணமலை.

தொ.பே: 026 2227 622, 077 7555 738

**உயர்தரப் பரீட்சைகளின் பின் உலகம் நோக்கிப் பயணிக்க உங்களுக்குத் தேவையான ஆங்கில கல்வி நெறி**



UNIVERSITY OF CAMBRIDGE

**Key English Test (KET)**

**முழுநேர 3 மாத கல்வி நெறி**

செப்டெம்பரில் ஆரம்பமாகியுள்ளது



**Veal Business College**

No:159 A.Sea Viwe Road Trincomalee. Tel: 026 2227 622 , 077 7555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை ... இல் 09. 09. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஆவணி மாதம் 24ம் திகதி
September 09, 2012
மலைமுரசு®
MALAIMURASU
உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

# விசேட இணைப்பு

# திருக்கோணமலை மாவட்ட தேர்தல் முடிவுகள்

| தொகுதி | பதிவு | அளிப்பு | செல்லுபடி | நிராகரிப்பு | ஐ.ம.சு.மு | ஐ.தே.க | தே.சு.மு | த.தே.கூ | இ.மு.கா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சேருவிலை | 70,141 | 42,854 | 39,875 | 2,979 | 17,785 | 7,148 | 6,450 | 5,014 | 2,390 |
| திருக்கோணமலை | 85,852 | 54,855 | 50,292 | 4,563 | 7,949 | 2,979 | 1,527 | 28,067 | 8,642 |
| மூதூர் | 89,370 | 55,999 | 52,967 | 3,032 | 13,011 | 12,318 | 490 | 10,213 | 14,617 |
| தபால் மூலம் | 10,612 | 10,279 | 9,529 | 750 | 4,579 | 1,994 | 1,055 | 1,102 | 527 |
| | **255,975** | **163,987** | **152,663** | **11,324** | **43,324** | **24,439** | **9,522** | **44,396** | **26,176** |

## வெல்லப்படக்கூடிய ஆசனங்கள்

| | |
|---|---|
| தமிழ் தேசியக் கூட்டமைப்பு | - 03 |
| ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு | - 03 |
| இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் | - 02 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 01 |

## கட்சியின் பெயர்கள் விரிவாக:

| | |
|---|---|
| தமிழ் தேசியக் கூட்டமைப்பு | - த.தே.கூ |
| ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு | - ஐ.ம.சு.கூ |
| இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் | - இ.மு.கா |
| ஐக்கிய தேசியக் கட்சி | - ஐ.தே.க |
| தேசிய சுதந்திர முன்னணி | - தே.சு.மு |

## திருக்கோணமலை மாவட்ட தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - 10,612 | ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | - 4,579 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 10,279 | ஐக்கிய தேசிய கட்சி | - 1,994 |
| செல்லுபடியானவை | - 9,529 | தமிழரசுக்கட்சி | - 1,102 |
| நிராகரிக்கப்பட்டவை | - 750 | தேசிய சுதந்திர முன்னணி | - 1,055 |
| | | இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் | - 527 |
| | | மக்கள் விடுதலை முன்னணி | - 97 |
| | | ஏனையவை | - 175 |

## திருக்கோணமலை சேருவிலை தொகுதி வாக்களிப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - 70,141 | ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | - 17,785 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 42,854 | ஐக்கிய தேசிய கட்சி | - 7,148 |
| செல்லுபடியானவை | - 39,875 | தேசிய சுதந்திர முன்னணி | - 6,450 |
| நிராகரிக்கப்பட்டவை | - 2,979 | தமிழரசுக்கட்சி | - 5,014 |
| | | இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் | - 2,390 |
| | | ஏனையவை | - 1,458 |

## திருக்கோணமலை மூதூர் தொகுதி வாக்களிப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - 89,370 | இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் | - 14,617 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 55,999 | ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | - 13,011 |
| செல்லுபடியானவை | - 52,967 | ஐக்கிய தேசிய கட்சி | - 12,318 |
| நிராகரிக்கப்பட்டவை | - 3,032 | தமிழரசுக்கட்சி | - 10,213 |
| | | சுயேட்சைக்குழு 10 | - 1,350 |
| | | ஏனையவை | - 1,458 |

## திருக்கோணமலை தொகுதி வாக்களிப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - 85,852 | தமிழரசுக்கட்சி | - 28,067 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 54,855 | இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் | - 8,642 |
| செல்லுபடியானவை | - 50,292 | ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | - 7,949 |
| நிராகரிக்கப்பட்டவை | - 4,563 | ஐக்கிய தேசிய கட்சி | - 2,979 |
| | | தேசிய சுதந்திர முன்னணி | - 1,527 |
| | | ஏனையவை | - 1,128 |

## கைகலப்பில் காயமடைந்தனர் இளைஞர்கள்

நேற்று முன்தினம் அன்புவழிபுரத்து இளைஞர்கள் சிலருக்கும், திருமலை மடத்தடி பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சிலருக்கும் இடையே அன்புவழிபுர விளையாட்டு மைதானப் பகுதியில் வைத்து தனிப்பட்ட காரணங்களால் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இக்கைகலப்பின் விளைவாகப் படுகாயமடைந்த மூவர் திருக்கோணமலை தள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அம்மூவருள் ஒருவர் பாடசாலை மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 08.09.2012 அன்று காலை 10 மணியளவில் தளவைத்தியசாலை யிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் படி அம்மூவரும் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு இருந்ததாகவும் பின் இருவர் சற்று குணமடைந்த நிலையில் சாதாரண சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டார்கள் எனவும், ஒருவர் மாத்திரம் அந் நேரம்வரை அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. சம்பந்தப்பட்ட மேலும் மூவர் காவல்துறைக் கண்காணிப்பில் உள்ளதாகவும் அறியக்கிடைத்துள்ளது.

## திருக்கோணமலை நகரில் வாக்களித்தனர் 64% மான மக்கள்

திருக்கோணமலை நகரில் அளிக்கப்பட்ட வாக்குகளின் வீதம் 63.89தாக காணப்பட்டது. தபால் மூலம் வாக்களிக்க தகுதியானவர்கள் உட்பட 85,852 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களைக் கொண்ட நகரப்பகுதியில் 54,855பேர் வாக்களித்திருந்தனர்

நிராகரிக்கப்பட்ட வாக்குககள் 4,563 போக எஞ்சிய வலிதான வாக்குகளின் 55.81 வீத வாக்குகளை இலங்கை தமிழரசுக்கட்சி கைப் பற்றியுள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் 17.18வீதத்தையும் ஐ.மக்கள் சுதந்திர கூட்டமைப்பு 15.81 வீத வாக்குகளையும் வென்றுள்ளன.

## நகரில் சுறுசுறுப்பான வாக்குப்பதிவு

திருக்கோணமலை நகரப்பகுதியின் வாக்குச் சாவடிகள் அதிகாலையில் சுறுசுறுப்பாக இருந்ததைக் காணக்கூடியதாய் இருந்தது.

நேற்றைய தினம் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களில் திருமலை நகரத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் சுறுசுறுப்பாக தங்கள் வாக்குகளை பதிவு செய்தனர்.

காலை 07 மணிக்கு ஆரம்பமான வாக்களிப்பின் சுறுசுறுப்பு காலை 09 மணிக்குப் பின்னரான மழையால் சிறிது நேரம் தடைப்பட்டது. எனினும் மழை ஓய மக்கள் அதிகளவில் நகரப்பகுதியில் தலைகாட்டத் தொடங்கியிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பின் கல்குடா தொகுதியின் வாக்களிப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - 100,616 | ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | - 22,965 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 61,357 | தமிழரசுக்கட்சி | - 21,876 |
| செல்லுபடியானவை | - 56,094 | இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் | - 8,604 |
| நிராகரிக்கப்பட்டவை | - 5,263 | ஐக்கிய தேசிய கட்சி | - 1,014 |
| | | சுயேட்சைக்குழு 21 | - 607 |
| | | ஏனையவை | - 1028 |

# மட்டக்களப்பு மாவட்ட தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - 5,629 | தமிழரசுக்கட்சி | - 3,238 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 5,538 | ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | - 1,428 |
| செல்லுபடியானவை | - 5,416 | இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் | - 443 |
| நிராகரிக்கப்பட்டவை | - 122 | சுயேட்சைக்குழு 8 | - 170 |
| | | ஏனையவை | - 137 |

## தென்னமரவாடியில் 192 வாக்குகளே அளிக்கப்பட்டன.

தென்னமரவாடிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்களிடையே வாக்களிக்கத் தகுதியானவர்களான 522 வாக்காளர்களில் 192 வாக்காளர்களே வாக்களித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இத்தகவலின் அடிப்படையில் சுமார் 400 வாக்காளர்கள் தமது வாக்குகளைச் செலுத்தவில்லை. வாக்களிக்காத இம்மக்களின் தொகை சுமார் 60% ஆகும். இதற்கான முக்கிய காரணமாக தென்னமரவாடிக்குரிய வாக்காளர்களில் பெரும்பாலானோர் அப்பிரதேசத்தில் இருந்து வேறு பிரதேசங்களை நோக்கி பெயர்ந்திருப்பதே ஆகும்.

# வாக்களித்தார் சம்பந்தன்



நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல் கிழக்கில் இடம்பெற்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைப்பது உறுதி என தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் திருக்கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்

நேற்றைய தினம் இவர் தனது வாக்கை புனித மரியாள் கல்லூரியில் அளித்துவிட்டு வெளியேறும் போதே இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு த.தே.கூ தேர்தலில் இருந்து விலகிக் கொள்ளப் போவதாக வெளிவந்த பொய்த் துண்டுப் பிரசுரங்கள் மக்கள் மத்தியில் விசிறப்பட்டது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் தாம் எக்காரணம் கொண்டும் இத்தேர்தலில் இருந்து விலகப்போவதில்லை எனவும் மக்களுக்காக தாம் எவ்வேளையிலும் குரல் கொடுக்கத் தயாராகவே இருக்கிறோம் என்பதுடன் எமது வெற்றியை எந்தவொரு தீய சக்தியும் தடுக்க முடியாது என்றும் இயம்பினார்.

இத்துண்டுப் பிரசுரங்கள் த.தே.கூவின் நிறம் மற்றும் சின்னங்களை அச்சொட்டாகக் கொண்டிருந்தது மக்களிடையே சிறிய தடுமாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. எனினும் துண்டுப்பிரசுரங்கள் வினியோகிக்கத் தடைவிதிக்கப்பட்ட ஒரு இரவில் துண்டுப் பிரசுரங்களை விசிற யாரால் முடியும் என்பதைப் புரிந்து கொண்டவுடன் தமது தயக்கம் அற்றுப் போய்விட்டதாக மக்கள் தெரிவித்தனர்.

# அம்பாறை சம்மாந்துறை தொகுதியின் வாக்களிப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - 75,640 | இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் | - 25,611 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 51,111 | ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | - 12,610 |
| செல்லுபடியானவை | - 48,560 | தமிழரசுக்கட்சி | - 8,767 |
| நிராகரிக்கப்பட்டவை | - 2,551 | ஐக்கிய தேசிய கட்சி | - 1,174 |
| | | ஏனையவை | - 398 |

# அம்பாறை மாவட்ட தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - 12,912 | ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | - 5,342 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 12,306 | ஐக்கிய தேசிய கட்சி | - 3,458 |
| செல்லுபடியானவை | - 11,731 | இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் | - 1,721 |
| நிராகரிக்கப்பட்டவை | - 575 | தமிழரசுக்கட்சி | - 862 |
| | | ஏனையவை | - 348 |

# அம்பாறை கல்முனைத் தொகுதியின் வாக்களிப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - 68,239 | இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் | - 22,884 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 44,079 | தமிழரசுக்கட்சி | - 11,702 |
| செல்லுபடியானவை | - 42,104 | ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | - 5,990 |
| நிராகரிக்கப்பட்டவை | - 1,975 | ஐக்கிய தேசிய கட்சி | - 1,134 |
| | | ஏனையவை | - 394 |

## வெருகல் பிரதேசத்தில் அமைதியான வாக்களிப்பு

வெருகல் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த 10 வாக்குச் சாவடிகளிலும் அமைதியான முறையில் வாக்களிப்பு நிகழ்ந்ததாக வெருகல் செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

முன்னைய கால தேர்தல்களை விட இம்முறை தேர்தல் தொடர்பான மக்களின் கவனம் அதிகரித்திருந்ததாகவும் அதனால் தனது அவதானிப்பின் படி சுமார் 65% அளவிற்கு வாக்களிப்பு நிகழ்ந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



## புதிய சோனகத் தெருவிலும் குறுகிய நேரப் பதற்றம்

திருக்கோணமலை நகரப்பிரதேசத்தின் புதிய சோனகத் தெருப்பகுதியில் நேற்றுக் காலை நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் களிடையேயும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்களிடையேயும் கைகலப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து பதற்றமான சூழ்நிலை நிலவியது. தேர்தல் கண்காணிப்பாளர்கள் சிலரின் வருகையைத் தொடர்ந்து இப்பதற்றமான சூழ்நிலை கட்டுக்குள் வந்ததாக கண்காயிப்பாளர்களை மேற்கோள்காட்டிச் செய்திகள் தெரிவித்தனர்.

## புல்மோட்டையில் கைகலப்பு

நேற்றைய தினம் புல்மோட்டையில் இரு கட்சி ஆதரவாளர்களுக்கிடையில் இடம்பெற்ற கைகலப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திருமலை மாவட்ட பிரதம வேட்பாளரின் இளைய சகோதரன் காயப்பட்ட நிலையில் புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக புல்மோட்டை செய்தியாளர் மலைமுரசுக்கு தெரிவித்தார்.

இந்த கைகலப்பில் இன்னும் இருவர் காயப்பட்ட நிலையில் புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்தை அடுத்து குறித்த இடத்தில் ஒன்று கூடிய மக்கள் காயப்படுத்தியவர்களைக் கைது செய்யுமாறு காவல்துறையைக் கோரியுள்ளனர். பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு ஆதரவாக கருத்துக்களை எழுப்பியதுடன், அந்த மனநிலையுடன் மக்கள் வாக்களிக்க வாக்குச் சாவடிகளை நொக்கி நடைபயின்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



வாக்களித்துவிட்டு வெளிவரும் த.தே.கூ. வின் தலைவர்



வாக்களிக்க தயாராகும் த.தே.கூ. வின் திருக்கோணமலை பிரதம வேட்பாளர்



வாக்களித்து விட்டு வெளிவரும் திருக்கோணமலை பிரமுகன்



வாக்களித்து விட்டு வெளிவரும் திருக்கோணமலை ஐ.ம.சு.மு வின் வேட்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org